| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 17/05/2023 | முதல் | 21/05/2023 |
| | அறிக்கை எண் : | 039/ 2023 | வெளியீட்டு நாள் : | 16/05/2023 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36°-40° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (11.05.2023 முதல் 15.05.2023) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 21-05-2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11/05 | 12/05 | 13/05 | 14/05 | 15/05 | தேதி | நாள்-5 17/05 | நாள்-5 18/05 | நாள்-5 19/05 | நாள்-5 20/05 | நாள்-5 21/05 |
| 1.6 | 15.4 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 4 | 0 | 3 | 3 |
| 36 | 39 | 36 | 38 | 40 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 40 | 41 | 40 | 40 | 40 |
| 26 | 24 | 25 | 26 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 26 | 27 | 26 | 26 |
| 4 | 5 | 4 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 4 | 4 | 4 | 4 |
| 65 | 73 | 76 | 68 | 66 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 60 | 70 | 70 |
| 54 | 48 | 50 | 46 | 48 | | 20 | 20 | 30 | 30 | 30 |
| 4 | 3 | 0 | 9 | 6 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 8 | 6 | 8 | 6 |
| வடக்கு | தென் கிழக்கு | 0 | தெற்கு | தெற்கு | **காற்றின் திசை** | வட மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு | மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மே 18, 20 மற்றும் 21ம் தேதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 40°-41° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 முதல் 8 கி.மீ வேகத்தில், வடமேற்கு, தென்மேற்கு மற்றும் மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

.

## அடுத்த இரு வாரத்திற்கான விரிவாக்கப்பட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (19-25 மே 2023):

### மழைப்பொழிவு :

19-05-2023 - 25-05-2023: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட குறைவான மழை பெய்ய வாய்ப்பு.

## அதிகபட்ச வெப்பநிலை :

19-05-2023 - 25-05-2023:

மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே இருக்கும். 32° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

## குறைந்தபட்ச வெப்பநிலை :

19-05-2023 - 25-05-2023: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு உயர்ந்தபட்ச வெப்பநிலையானது இயல்பை விட 2 முதல் 4 டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்படும். வெப்பத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்க தினமும் போதுமான அளவில் தாதுக்கலவையினை கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும். குறிப்பாக பொட்டாசியம் நிறைந்த தாதுக்கலவையினை கொடுப்பது மிகவும் அவசியமாகும். ஈரமான சணல் சாக்குககளை மாட்டு கொட்டகைகளில் பக்கவாட்டில் கட்டி விடவும்.

## எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**முக்கிய பயிர்கள் : மக்காசோளம், கரும்பு, கால்நடை.**

### மக்காசோளம்:

- மக்காச்சோளப் பயிரில் கதிர் துளைப்பான் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டேருக்கு 12 இனக்கவர்ச்சி பொறிகள் அமைத்து ஆண் அந்துப் பூச்சியின் எண்ணிக்கையை குறைக்கலாம்.

### கரும்பு:

- கரும்பு சாகுபடியில் மேலுரமிடுதல் நல்ல பயனளிக்கும். கிணற்றுப் பாசனமுடைய பகுதிகளில் ஒரு எக்டேருக்கு 225 கிலோ தழைச்சத்து மற்றும் 112 ½ கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் மூன்று சம பாகங்களாகப் பிரித்து கரும்பு நடவு செய்த 30, 60 மற்றும் 90ம் நாட்களில் இடுதல் வேண்டும்.

### கால்நடை:

- கோழிகளுக்கு பி-காம்ப்லெக்ஸ் திரவத்தினை குடி நீருடன் கலந்து அளிப்பதால் வெப்ப தாக்க அழற்சியை குறைக்கலாம்.
- வெப்ப அழுத்தத்தை சமாளிக்க கோழி கொட்டகையின் ஒரு அலகு (யூனிட்) பகுதியில் பறவைகளின் எண்ணிக்கையை குறைத்து வைக்கும்படி விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.